20.08.2025 வா.சா.3 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஓ.எஸ்.எண்.75/2020 ) திரு.பாலசுப்பிரமணியன்.

3.8.10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

1) நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி சுடலைமுத்து எனக்கு என்ன உறவு முறை என்றால் சித்தப்பா முறை. எனது முதல் விசாரணையில் சாட்சி கூண்டில் ஏறி சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. நிருபண வாக்குமூலத்தை காண்பித்து அதில் பாலசுப்பிரமணியன் என்று கையெழுத்து செய்துள்ளது யார் என்றால் நான் தான் கையெழுத்து செய்தேன் என்னுடைய கையெழுத்து தான். நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சுடலைமுத்து தயார் செய்து கொண்டு வந்து கொடுத்தார் அதில் நான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் தெரியும். யார் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம்தெரியுமா என்றால் தெரியும். சுடலைமுத்து என்பவர் வழக்கு தாக்கல் செய்தள்ளார்.யார் யார்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சண்முகராஜ்.மகேஸ்வரன் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். சண்முகராஜ்,மகேஸ்வரன் ஆகியோரைஎப்படி எனக்கு தெரியும் என்றால் உள்ளூர் என்பதால் எனக்கு தெரியும். என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சிவில் வழக்கு. வாதி சுடலைமுத்து தாக்கல் செய்துள்ள வழக்கில் என்ன சர்வே எண் அதன் விஸ்தீரணம் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.268/7 ஏ,268/7 சி ஆகும்.அதன் அளவு தெரியுமா என்றால் அளவு தெரியாது. சர்வே எண்.268/7 ஏ,268/7 சி யார் யார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் வாதி சுடலைமுத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வாதி சுடலைமுத்துக்கு எப்படி ஒதுக்கினார்கள் என்றால் நாகம்மாள், சண்முகவேல், முருகன், கணபதி, ஆறுமுகம் ஆகியோர்கள் சேர்ந்து சுடலைமுத்துக்கு சர்வே எண்.268/7 ஏ,268/சி-யும் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கப்பட்டதற்கு எந்தவிதமான ஆவணம் இல்லை என்றால் சரிதான். அய்யம்பெருமாள் செட்டியாரை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். சுப்பையா செட்டியாரை பார்த்துள்ளேன் என்றால் சரிதான். அய்யம்பெருமாள் செட்டியாருக்கு எத்தனை பேர்கள் என்றால் 2 வாரிசுகள்.

2) சுப்பையா செட்டியார்,ஆவுடையப்ப செட்டியார் ஆகியோர்கள். ஆவுடையப்பச்செட்டியாரின் மகள் சின்னம்மாள் வாரிசு என்றால்

சரிதான்.அய்யம்மாள்பெருமாள் செட்டியார் இறந்தபின்னர் அவரது வாரிசான சுப்பையா செட்டியார், ஆவுடையப்பன் செட்டியார் பாகம்பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஆவுடையப்பச்செட்டியாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் அவரது மகளான சின்னம்மாளுக்கு திருமணத்தின் போது ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். சின்னம்மாள் கணவர் என்னவென்றால் சுப்பையா செட்டியார். 2 ம்பிரதிவாதி மாணிக்கம் எப்போது இறந்து போனார் என்றால் 2013, 2014 ல் இறந்திருப்பார். சின்னம்மாள்- சுப்பையா செட்டியாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 பேர்கள். அவர்கள் வள்ளிநாயகம்,சுடலைமுத்து, லட்சுமிஆகியோர்கள் வாரிசுகள். சின்னம்மாள் வாரிசுகளான வள்ளிநாயகம்,சுடலைமுத்து என்பவர்கள் சேர்ந்து மாணிக்கம் என்பவருக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். மாணிக்கம் உயிருடன் இருக்கும் போதே தெரியும் என்றால் இல்லை இறந்த பின்னர் தான் தெரியும். தாவாச்சொத்தின் அனுபவம் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதி சுடலைமுத்துக்கு உறவினர் என்பதால் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
20.08.2025.